### ஒன்றிய பி.ஜே.பி. அரசின் எதேச்சதிகாரம்!

# விருதாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இனி ‘சாகித்ய அகாடமி’க்கு கிடையாதாம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டனம்!



சென்னை, டிச. 31 –

விருதாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இனி சாகித்ய அகாடமிக்குக் கிடையாதாம்! ஒன்றிய அரசுடன் கலந்து முடிவெடுக்க வேண்டுமாம்! ஒன்றிய பி.ஜே.பி. அரசின் யதேச்சதிகாரத்தைக் கண்டித்து திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தியாவில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், சில அமைப்புகள், எந்தச் சார்பும் அற்றவையாக, பொதுவானதாக இருக்க வேண்டும் என்னும் நோக்கில் தான், கடந்த காலங்களில் அரசு இயந்திரத்தை இயக்கும் அமைப்புகளும், கண்காணிக்கும் அமைப்புகளும் அரசியலமைப்புச் சட்டப் படியும், சிறப்புச் சட்டங்களின் படியும் உருவாக்கப் பட்டன, சுதந்திரமாக இயங்கும் வண்ணம்.

**தன்னாட்சி அமைப்புகளை ஆக்கிரமிக்கும் ஆர்.எஸ்.எஸ்.!**

ஆனால், தற்போது ஆளும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசு பாசிசப் போக்குடன் எல்லா அமைப்புகளையும், நிறுவனங்களையும் தங்களின் கருவிகளாகவும், கைப் பாவை களாகவும் மாற்றி வைத்து வருகின்றன! நாளும் அபகரித்துக் கொண்டே இருக்கிறது; அதன் அதிகாரமிக்க பதவிகளில் ஆர்.எஸ்.எஸ். ஹிந்துத்துவாவினரைக் கொண்டு நிரப்புவது வாடிக்கையாகி வருகிறது!

மத்திய புலனாய்வுப் பிரிவு (சி.பி.அய்.), அமலாக்கத் துறை (ஈ.டி), வருமான வரித் துறை (அய்.டி), உயர் கல்வித் துறை அமைப்புகள், தேர்தல் ஆணையம் இப்படி நீளும் பட்டியலில் தற்போது கலை, பண்பாட்டுத் துறையில் எஞ்சியிருந்த அமைப்புகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஆர்.எஸ்.எஸ்.சின் ஆக்டோபஸ் கரங்கள் நீண்டுள்ளன.

**ஆர்.எஸ்.எஸ். ஆக்டோபஸ்!**

லலித் கலா அகாடமி, சாகித்ய அகாடமி, சங்கீத நாடக அகாடமி, தேசிய நாடகப் பள்ளி போன்ற அமைப்புகளையும்– ஆர்.எஸ்.எஸ். ஆக்டோபஸ் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளது.

ஆண்டுதோறும் வழங்கப்படும் புகழ்பெற்ற இலக்கிய விருதான சாகித்ய அகாடமி விருதுகளில், 2025ஆம் ஆண்டுக்கான விருதுகளை அறிவிக்கக் கடந்த 18ஆம் தேதி அன்று செய்தியாளர் சந்திப்பு நடத்தத் திட்டமிடப்பட்டு, செயற்குழு உறுப்பினர்களும் இந்தியா முழுவதுமிருந்து வந்துவிட்ட நிலையில், ஒன்றிய அரசின் கலாச்சாரத் துறையிடமிருந்து வந்த ஆணை காரணமாக செய்தியாளர் சந்திப்பு நிறுத்தப்பட்டது.

விருதாளர்கள் யாரென்பதை முன்பே உரிய குழுக்கள் கூடி முடிவு செய்துவிட்டன. அது குறித்த செய்திகளும் விருதாளர்களுக்கு வந்து சேர்ந்துவிட்டன என்றாலும்,

**ச.தமிழ்ச் செல்வனுக்கான விருதும் நிறுத்தி வைப்பு!**

தமிழில் மூத்த எழுத்தாளரும், முற்போக்குச் சிந்தனையாளரும், த.மு.க.எ.ச.வின் மேனாள் தலைவருமான ச.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு விருது அறிவிக்கப்பட விருந்தது.

சாகித்ய அகாடமி குழு வழங்கும் பட்டியலை, ஒன்றிய அரசின் கலாச்சார அமைச்சகம் ஒப்புக் கொள்வது வழமை. ஆனால், இனி மேற்கூறிய பண்பாட்டு, கலை அமைப்புகள் ஒன்றிய அரசுடன் கலந்து ஆலோசித்த பிறகுதான் விருதாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டிருப்பதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது! என்னே கொடுமை!

**சாகித்ய அகாடமி!**

இந்தியாவின் தேசிய இலக்கிய அமைப்பாக சாகித்ய அகாடமி, 1954 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் தேதி நிறுவப்பட்டது. இது நாட்டின் இலக்கிய உரையாடல்கள் நிகழவும், பொன்மொழிகளில் வெளியீடுகளைக் கொண்டுவரவும், விருதுகள் மூலம் பாராட்டவும், இலக்கிய மேம்பாட்டிற்குமாக அமைக்கப்பட்ட நிறுவனமாகும். ஆங்கிலம் உட்பட இந்திய மொழிகளில் இலக்கியச் செயல்பாடுகளை மேற்கொள்ளும் இந்த அமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மொழிகளில் உள்ள இலக்கியப் படைப்புகளுக்கு ஆண்டுதோறும் 24 விருதுகளையும், மொழிபெயர்ப்புகளுக்கு அதே எண்ணிக்கையிலான விருதுகளை யும் வழங்குகிறது.

அரசாங்கத்தால் நிறுவப்பட்டிருந்தாலும், இந்த அகாடமி, பெயரளவிலேனும் ஒரு தன்னாட்சி அமைப்பாகவே செயல்பட்டு வந்தது. இப்போது முற்றாக அதன் செயல்பாடுகளைத் தங்கள் வசம் கொண்டு செல்ல ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. அரசு பணிகளை விரைவுபடுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் எழுத்து, கலை, இலக்கியம், நாடகம் / திரைப்படம், ஊடகம், பண்பாட்டைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், ஆக்கிரமிப்பதன் மூலமும் தான் அந் நாட்டில் ஃபாசிசமும், சர்வாதிகாரமும் நிறுவப்படு கின்றன. படிப்படியாக இந்தியாவின் செய்தி, தொலைக்காட்சி ஊடகங்களை ஆர்.எஸ்.எஸ். தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டது.

திரைப்படத்துறையில் பல்லாயிரம் கோடிகளைச் செலவழித்து, திரைப்படங்கள் உருவாக்கப்படுகின்றன. இலக்கியத் துறையில் இருக்கும் முற்போக்குச் சிந்தனையை, ஸநாதன எதிர்ப்புக் குரலை நசுக்கவே இப்போது இந்த அமைப்புகளையும் தங்கள் கொடுங் கரங்களுக்குள் கொண்டு வந்துள்ளது ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க அரசு.

இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. நாடு முழுவதும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் கொதித்துப் போயுள்ளனர். மூத்த எழுத்தாளர்களுக்கு நேர்ந்த அவமதிப்பு இது என்று நாடு முழுவதும் கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன. ஆனால், எதைக் குறித்தும் கண்டுகொள்ளாமல், தனது பாசிசப் போக்கை மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறது ஒன்றிய அரசு.

சாகித்ய அகாடமியின் விருதுப் பட்டியலில் எப்போதும் சர்ச்சைகள் இருப்பது உண்டு. ஒரு சில சமயம் சார்புகளும் இருக்க வாய்ப்பு உண்டு. ஆனால், அதையெல்லாம் மீறித் தான் ஓரளவு தன்னாட்சியுடன் அந்த அமைப்பு செயல்படுகிறது. புரட்சிக் கவிஞரது ’பிசிராந்தையார்’ நூலுக்காக சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. அதையும் அழிப்பதற்கு ஒன்றிய அரசு முயல்கிறது.

இந்தப் பிரச்சினையில் எழுத்தாளர்கள், கலைஞர்களுடன் கருத்துரிமையை விரும்பக் கூடிய அனைவருடனும் நாமும் முன் களத்தில் நிற்கிறோம். பாசிசத்தின் கூறுகள் எந்த வடிவில் வந்தாலும் அவற்றை நசுக்குவோம். ஆர்.எஸ்.எஸ். ஆக்டோபஸ் கரங்கள் எங்கு நீண்டாலும் அதனை வெட்டியெறிவோம்!

**கண்டனக் கணைகள் பாயட்டும் – கருத்துச் சுதந்திரம் காக்கப்படட்டும்!**

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் – நடப்பு கல்வி ஆண்டில்

# மாணவர்களுக்கு 60 லட்சம் கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை வழங்கி புதிய சாதனை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, டிச.31-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் நடப்பு கல்வி ஆண்டில் (AY 202526) பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 60 லட்சம் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை வழங்கி புதிய சாதனை படைத்துள்ளது என போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்கி, ஏழை எளிய மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பள்ளிக்குச் சென்று கல்வி பெறுவதை உறுதி செய்யும் திட்டத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை புதிய மைல் கல்லை எட்டியுள்ளது.

2023-24ஆம் கல்வியாண்டு வரை, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள், மாணவர்களின் புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்களை அந்தந்த பள்ளிகளிலிருந்து பெறப்பட்டு, அரசு போக்குவரத்து கழக அலுவலர்களால் தொகுக்கப்பட்டு அச்சகங்கள் வழியாக பயண அட்டைகள் அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இதற்கு கால தாமதம் ஏற்படுவதுடன் போக்குவரத்து கழக மற்றும் பள்ளிக் கல்வி அலுவலர்கள் அதிக அளவில் ஈடுபடுத்தப்பட வேண்டிய சூழல் இருந்தது.

மேற்கண்ட நடைமுறையை எளிமைப்படுத்தும் நோக்கில், 2024-25-ஆம் கல்வியாண்டில், பள்ளிக் கல்வித் துறையின் EMIS இணையதளத்தில் உள்ள மாணவர் தரவுகளை தொகுத்து கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் அச்சிடப்பட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 25 சதவீதம் கூடுதலாக பயண அட்டைகள் வழங்கப்பட்டன. (2023-24 20.06 லட்சம், 2024-25 25.01 லட்சம் பயண அட்டைகள்).

இதனைத் தொடர்ந்து, நடப்பு கல்வி ஆண்டில் (AY 202526), அனைத்து தகுதியான மற்றும் தேவையுள்ள மாணவ, மாணவியர்களுக்கும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை எளிய முறையில் வழங்கிட வேண்டும் என்ற நோக்கில், பள்ளி கல்வித் துறையின் EMIS இணையதளத்தில், விருப்பமுள்ள அனைத்து மாணவ, மாணவியரின் விபரங்கள் பெறப்பட்டு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் விரைந்து தயாரிக்கும் பணி போக்குவரத்துத் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் விளைவாக, நடப்பு கல்வியாண்டில் (AY 202526) சுமார் 60.00 லட்சம் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை புதிய சாதனையை படைத்துள்ளது. மேலும் மாணவர் நலன், டிஜிட்டல் நிர்வாகம் மற்றும் துறைகளின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் தமிழ்நாடு அரசின் உறுதியான அர்ப்பணிப்பையும் இது வெளிப்படுத்துகிறது.

இதனால், தேவை உள்ள அனைத்து மாணவ, மாணவியர்களும் கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகளை பயன்படுத்தி பள்ளிக்கு எளிதாக பயணம் செய்யும் வசதியை, மாணவர்களின் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை உருவாக்கியுள்ளது.

கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்கிய விபரம்.

கல்வியாண்டு வழங்கப்பட்ட கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் (லட்சங்களில்) உயர்வு (சதவீதத்தில்)

2023-24 - 20.06

2024-25 - 25.01 - 25.0 %

2025-26 - 60.00 -140.0 %

### திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# திராவிட மாடல் அரசின் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்.!

### திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை! அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – வி.ஜி.ராஜேந்திரன் எம்எல்ஏ பங்கேற்பு!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை.!

திருவள்ளூர் டிச 31;-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் 02-01-2026 அன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் திருத்தணி மேற்கு ஒன்றியம் மற்றும் 03-12-2026 அன்று சனிக்கிழமை மாலை 5 மணி பூண்டி மேற்கு ஒன்றியத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்

தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கழக கொள்கை பரப்புச் செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் தலைமை செயற்குழு உறுப்பினரும். திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்

கூட்டம் முன்னதாக திருத்தணி மேற்கு ஒன்றிய செயலாளர் என்.கிருஷ்ணன் பூண்டி மேற்கு ஒன்றிய செயலாளர் டி.மோதிலால் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அமைத்தலைவர் க.திராவிட பக்தன் மாநில நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர் பெ.சேகர், தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ. குருதாஸ். மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி. பா.உதயமலர் பண்டியன், எம்.மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர். மு.சுப்பிரமணி யம், பி.இராஜேஸ்வரி. இரவீந்திரநாத். ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், பிரகாஷ் ஞானஒளி,

வி.வினோத்குமார், பா.ஆர்த்திரவி, ஜி.ரவீந்திரா, சி.என்.சண்முகம், சி.ஜெ.சீனிவாசன், பெ.பழனி, பி.டி.சந்திரன், கே.ராஜேந்திரன், பா.சம்பத், மா.இரகு, எம்.எல்.விஜயகுமார், சி.ஜெ.செந்தில்குமார், டி.ஆர்.கே.பாபு,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ம.கிரண், ஏ.முரளிசேனா, சரஸ்வதி சந்திரசேகர், ஜி.கோவிந்தம்மாள், பி.கே.நாகராஜ், எஸ்.குமரன், களம்பாக்கம் எம்.பன்னீர் செல்வம், உதயசூரியன், ஜி.சித்திக் அலி, மத்தூர் பன்னீர் செல்வம், சிலம்பு பன்னீர் செல்வம், மதுசூதனன், நந்தகோபால், தினேஷ், எம்.எஸ்.அருண்குமார், ஜி.வேலாயுதம் சி.எஸ்.விஜயகுமார், ப.கோபால் , எம்.சீனிவாசன், பி.எல்.ஆனந்தன், எஸ்.ஜெகஜீவன்ராம், ஜி.ஜெய்கிருஷ்ணா, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் உள்ளாட்சி மன்ற இன்னாள் முன்னாள் பிரதிநிதிகள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு திருத்தணி சந்திரன் தெரிவித்துள்ளார்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியம் வேலாமூர் ஊராட்சியில் வாக்குச்சாவடி பரப்புரைக் கூட்டம் மற்றும் பாக முகவர்கள், நிலை குழு உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் டி.வி. கோகுலகண்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்தக் கூட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள் ஜி.சிவகுமார், சீனிவாசன், இந்துமதி, பார்த்தசாரதி, ராஜகோபால், யுவராஜ், தணிகை மலை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# குரலற்றவர்களின் குரலாக....



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு ஒரு வழக்கம் இருந்தது. அவர் தனது சொந்த வாழ்க்கை, சினிமா துறை, அரசியல் இப்படியாக அனைத்தையுமே. தான் ஆட்சி அதிகாரத்திற்கு வரும்பொழுதெல்லாம் லிங்க் பண்ணி விடுவார்.

மிக மிக மிக... எத்தனை மிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். அத்தனை மிகவும் பின் தங்கிய சமூகத்திலிருந்து வந்தவன் என்று தன்னை அவர் ஒரு தரம் குறிப்பிடுகிறார். அந்த வலியும் வேதனையும், அவமானமும் தான் சமூகநீதி எனும் அனைத்து சமூகங்களுக்குமான ஒரே நீதி. சமூகநீதி. சமநீதி. சமத்துவம். சுயமரியாதை. இப்படியான கொள்கைகளை உரத்துச் சொன்ன இயக்கத்தில் தன்னை முழுமூச்சாக. அதையே தன் வாழ்க்கையாக அமைத்துக்கொள்ள காரணமாக அமைந்தது என்றே எண்ணுகிறேன்!

அந்த இயக்கத்தில் மிகத்தீவிரமாக ஈடுபட்ட காரணத்தினாலேயே. அவர் மீது ஏவப்பட்ட வன்முறை வெறியாட்டத்தால், அவருடைய கண்ணில் ஏற்பட்ட கோளாறு.

அவர் ஆட்சிக்கு வந்ததும் ஏழை, எளிய, அடித்தட்டு மக்களுக்கான இலவச கண்ணொளித்திட்டமாக உருவெடுத்தது!

தன்னுடைய #பராசக்தி படத்தில். “தமிழ்நாட்டில் கால் வைத்த உடனேயே கேட்கின்ற முதல் குரல். அம்மா தாயே. “ என்று அவர் எழுதிய வசனம் தான். தமிழ்நாட்டைப் பற்றிய அவருக்கு இருந்த ஒரு கனவு.

ஆட்சி அதிகாரம் அவர் கரங்களில் தவழ்ந்த போது. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டமாக மலர்ந்தது!

இப்படி தலைவர் கலைஞர் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டத்திற்கும் பின்னால். அவர் தனது சொந்த வாழ்விலோ அல்லது சமூகத்திலோ அவர் அனுபவித்த அல்லது சந்தித்த பிரச்சினைகளை. வசனங்கள் மூலமாக அவரது படங்களில் பொருத்தி. அவைகள் அனைத்தையுமே அவர் ஆட்சிக்காலங்களில் திட்டங்களாக நிறைவேற்றி. அந்த சமூக அவலங்களை எல்லாம் கலைந்தார்.



**சௌமியன் வைத்தியநாதன்**
*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*

இதை ஏன் இப்போ நினைவு கொள்கிறேன் என்றால்.

இரண்டு நாட்களுக்கு முன்பாக சென்னை மெரினா கடற்கரை அருகில் பேரறிஞர் அண்ணா சதுக்க பேருந்து நிலையத்தின் பின்பக்கம்... 2500 சதுர அடியில் மிக மிக அற்புதமான ஒரு கட்டிடத்தை தமிழ்நாடு துணை முதலமைச்சரும். தலைவர் கலைஞரின் பெயரனுமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

என்னய்யா ஒரு சாதாரண கட்டிடம் திறந்து வைத்ததற்கா இவ்வளவு பில்டப் என்று கேட்பீர்களேயாயின்.

விஷயம் இருக்கின்றது. அந்த கட்டிடம் எதற்காக வென்றால். மெரினா கடற்கரையில் தரையில் கடைகள் போட்டு, சிறு சிறு சாமான்கள் விற்பனை செய்து காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கும் வீடற்ற மக்கள், இரவு நேரங்களில் அங்கேயேவோ அல்லது ஏதாவது ஒரு பிளாட்ஃபாரத்திலோ படுத்து உறங்கி காலை எழுந்து மீண்டும் தங்கள் வியாபாரத்தில் ஈடுபடுவார்கள்.

இதை மையமாக வைத்துத் தான் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடித்த #மனிதன் என்ற திரைப்படம் உருவானது. அதில் அந்த பிளாட்ஃபார வாசிகளுக்கு ஒரு பணக்கார இளைஞனால் ஏற்பட்ட பெரும் தீங்குக்கு... வழக்கறிஞராக நின்று நியாயமும், நீதியும் வாங்கித் தருவார்!

அந்த திரைப்படத்தின் ரீலில் அவர் ஹீரோவாக செய்த காரியம் தான்.

இன்றைக்கு அவரது ரியல் வாழ்வில். அவர் கரங்களில் ஆட்சி அதிகாரம் தவழும் பொழுது. அப்படியான ப்ளாட்ஃபார வாசிகளுக்கு இரவு நேரங்களில். நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், பயமின்றியும் உறங்கி எழுந்து மறுநாள் தங்கள் வியாபாரத்தைக் கவனிப்பதற்காக கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டிடம் தான் அது!

அவர்களுக்கு இனாமாக செய்வது தானே என்று ஏனோ தானோ என்று இல்லாமல், முழுவதும் தரமான டைல்ஸ் போடப்பட்ட தளம், அனைவருக்கும் ஃபேன் வசதி, பாய், தலையணை, போர்வை... ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக, தேவையான அளவிற்கு குளியலறை மற்றும் கழிப்பறைகள். அம்மா உணவகத்தில் இருந்து உணவு. 24 மணி நேர செக்யூரிடி வசதி. இவை அனைத்திற்கும் உச்சமாக.

அவர்களுக்கு பிள்ளைகள் இருப்பார்கள் அல்லவா?! அந்த பிள்ளைகள் தங்கள் பெற்றோருடன் வேலைக்குச் செல்ல வேண்டாம். அவர்களும் மற்ற பிள்ளைகள் போல பள்ளிக்குச் சென்று படிப்பதற்கான ஏற்பாடுகளையும் அரசு பள்ளிக்கல்வித் துறை மூலமே செய்து கொடுத்து.

அதோடு மட்டுமல்லாமல். அந்த மக்கள் தங்கள் வியாபாரத்தை இன்னும் அபிவிருத்தி செய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கான கைவினை மற்றும் சிறு சிறு தயாரிப்பு களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள்.

ச்சான்ஸே இல்லை இவர்களால் ஏதாவது வாக்குகள் கிடைக்கப் போகின்றதா என்ன..?! அதைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல். தாழக்கிடப்போரை கை தூக்கி விடுவதே அறம் என்பதற்கு உதாரணமாக. குரலற்றவர்களின் குரலாக.

இவர் கலைஞரின் பேரன். தோழியர் விடுதி தந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் மகன். விதை நல்லதாக இருந்தால். வாரிசாக இருந்தாலும் தவறில்லை!

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எம்.கே. தண்டபாணி

**டிசம்பர் 31 (2021)**



**1969ஆம் ஆண்டில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**1972ஆம் ஆண்டில் கிளை பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட துணைச் செயலாளராகவும் –1991 முதல் மறையும் காலம் வரையிலான 25 ஆண்டுகள் தொடர்ந்து காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**1986, 1996, 2006, 2011 ஆகிய நான்கு முறை, நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி மன்றத் தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**